DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: C.No.171/2022**

**prosecution witness: Pw3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Raju | Caste | : | |
| Fathers Name | : | | calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**A1, A2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜு | ஜாதி | : | |
| த/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**12.05.2023**

முதல் விசாரணை:

நான் இராமேஸ்வரம் ராஜுவ் காந்தி நகரில் வசித்து வருகிறேன். மீன் பிடி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் எதுவும் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 13.08.2021ம் தேதி இரவு 08.00 மணிக்கு நானும், இராமநாதன் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்த போது இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், இராமநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.